செ.கு.எண் : 112 நாள் : 18.12.2021

மு.பெ. சாமிநாதன்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

நாள் 18-12-2021

## வாழ்த்துச் செய்தி

அன்புடையீர் வணக்கம்,

பாரம்பரியம் மிக்க **'தி இந்து'** குழுமத்தின் தலைமை பொறுப்பில் உள்ள திருமதி.**மாலினி பார்த்தசாரதி** அவர்களுக்கு, கொலம்பியா ஜர்னலிசம் கல்வி மையத்தின் விருது அளிக்கப்பட்டிருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

**'தி இந்து'** ஆங்கில நாளிதழின் ஆசிரியர் பொறுப்பை வகித்ததோடு, சர்வதேச அளவிலான தலைவர்களை சந்தித்து பேட்டி கண்ட வகையிலும், **'தி இந்து'** குழுமத்துக்கே உரிய நடுநிலையோடும், துணிச்சலோடும், தலையங்கம் மற்றும் செய்திகளை வெளியிட்ட வகையிலும், திருமதி.**மாலினி பார்த்தசாரதி** அவர்கள் உலகத்தரம் மிக்க ஒரு பத்திரிகையாளராக தன்னை நிலை நிலைநாட்டிக் கொண்டவர்.

தினசரி செய்தித்தாள்கள் மற்றும் மாதமிருமுறை பத்திரிகை ஆகியவற்றை வெளியிடும் **'தி இந்து'** குழுமத்தின் சார்பில் மும்பையில் தனி பதிப்பு கொண்டு வருவதற்கான முக்கிய காரணகர்த்தாவாகவும் விளங்கியவர் அவர்.

அத்தகைய ஒரு திறமை மிக்க பத்திரிகையாளரும் தனது முன்னாள் மாணவியுமான திருமதி.மாலினி பார்த்தசாரதிக்கு இந்த விருதை அளித்ததன் மூலம் **கொலம்பியா ஜர்னலிசம் கல்வி மையம்** மேலும், பெருமை சேர்த்துக்கொண்டிருக்கிறது.

இதே நடுநிலை மற்றும் துணிச்சலோடு, **'தி இந்து'** குழுமத்தின் பத்திரிகைகளை வழி நடத்தி சிறந்த முறையில் தொடர்ந்து மக்கள் தொண்டாற்ற வேண்டும் என்று திருமதி. **மாலினி பார்த்தசாரதியை** மனமார வாழ்த்துகிறேன்.

நன்றி!

அன்புடன்,

(மு.பெ.சாமிநாதன்)

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9